8

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0128 /2015/ந

ஆணை எண்: 112 /2016

நாள்: 21 /06 /2016

திரு. கோ,தவசமுத்து, தலைவர்
வாய்க்கால்கள், பாசனதாரர்கள் சபை,
திருவாரூர்.

மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருவாரூர் நகராட்சி.

எதிர் மனுதாரர்

## ஆணை

திரு.கோ.தவசமுத்து, தலைவர் பாசனதாரர்கள் சபை, திருவாரூர் என்கிற மனுதாரரது 27.06.2015 நாளிட்ட புகார் மனு 29.06.2015 அன்று முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்படி மனு குறித்து திருவாரூர் நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டு நடவடிக்கையிலிருந்த போதும் 2015–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் முடித்தல்) விதிகளில் விதி 4ன் படி முறையீட்டினை உரிய படிவத்திலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு ரூபாய் பத்துக்கான (Rs.10/–) நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடனும் தாக்கல் செய்திடுமாறு 21.03.2016 நாளிட்ட அறிவிப்பின் மூலம் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மனுதாரர் முறையே தனது 05.04.2016 நாளிட்ட மனுவினைத் தாக்கல் செய்துள்ளார். இது தொடர்பாக பெறப்பட்ட அறிக்கைகள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் இம்முறைமன்ற நடுவத்தால் கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

2. மனுதாரரது மனுவில் திருவாரூர் நகராட்சியில் கல்வி வரி என்ற பெயரில் வருடாவருடம் ரூ.30லட்சம் அளவில் வருவாய் வரப்பெற்றும் அதனை நகராட்சி பள்ளிகளின் பராமரிப்பிற்கு செலவிடாமல் பிற காரணங்களுக்காக வேறு தலைப்புகளில் செலவிடப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. திருவாரூர் நகராட்சின் பராமரிப்பிற்குட்பட்ட ராமகே பள்ளிக்கூடம் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் பணிகள் முடிக்கப்படாமலும் தண்ணீர் வசதி இன்றியும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து 13.04.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகி உரிய விளக்கங்கள் அளிக்குமாறு தெரிவித்து மனுதாரருக்கு 21.03.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால், மனுதாரர் வரத் தவறியுள்ளார். இருப்பினும், மனுதாரருக்கு கூடுதல் வாய்ப்பு அளித்திடும் பொருட்டு 16.06.2016 அன்று மறு விசாரணை நிர்ணயிக்கப்பட்டு 01.06.2016 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது.

4. இதனிடையே திருவாரூர் நகராட்சி ஆணையரது விரிவான அறிக்கை (ந.க.எண்.1629/16/இ1 நாள்.13.04.2016) 21.04.2016 அன்று முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் திருவாரூர் நகராட்சியில் கல்வி நிதிக்குண்டான கல்வி நிதியினை பள்ளிகளின் பராமரிப்புகளுக்கு மட்டுமே செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதெனவும் கல்வி நிதிக்கான தொகையினை பல்வேறு தலைப்புகளின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ள இயலாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் கல்வி நிதியின் கீழ் அனைத்துப் பணிகளும் நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்று பொறியியல் கையேடு வழிகாட்டுதலின் படியும் ஒப்பந்த விதிகளின் படியும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு நகர்மன்ற ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றதெனவும் முடிக்கப்பட்ட பணிகளை அளவீடுகள் செய்து அளவு புத்தகத்தில் பதிவு செய்த பின்னரே ஒப்பந்ததாரர்களுக்கு தொகைகள் காசோலைகள் மூலம் வழங்கப்படுகிறதெனவும் அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2011–ம் ஆண்டிலிருந்து

கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணி விவரங்கள் மற்றும் செலவினங்கள் குறித்து தொகுத்து அறிக்கையில் பட்டியலாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5. மேற்படி பட்டியலைப் பரிசீலித்ததில் மொத்தமுள்ள 19 பணிகளில் பள்ளிகள் பராமரிப்பு பணிகள் தவிர வேறு எந்தவிதமான பணிகளும் இடம் பெறவில்லை என்பது நன்கு புலனாகிறது, இக்கடித நகல் நகராட்சி ஆணையரால் மனுதாரருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி விவரங்கள்அனைத்தும் 17.06.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான திருவாரூர் நகராட்சி ஆணையர் அவர்களால் நேரில் விளக்கமளிக்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனைக்குட்படுத்தியும் எழுத்து பூர்வமான வாக்குமூலம் அளித்தும் உறுதி செய்யப்பட்டது.

6. மேலும், ராம்கே நகராட்சி பள்ளியில் பழுதடைந்த கட்டிடம், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (ICDS) ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளதெனவும் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வசதியும் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளதெனவும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்கனவே புகார் மனு அளித்து அதன் பேரில் விசாரணை நடைபெற்று பதிலளிக்கப்பட்டது குறித்தும் மனுதாரர் இதுபோன்று புகார்கள் அனுப்புவதை வாடிக்கையாக கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. ஆவணங்களைப் பரிசீலித்ததில் மனுதாரரது 19.03.2015 நாளிட்ட இதே பொருள் தொடர்பான புகார் மனு தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்திற்கு கடிதம் ந.க.6092/கே2/2015, நாள்.19.06.2015ன் வாயிலாக அறிக்கை அனுப்பப்பட்டு மனுதாரருக்கு நகலிடப்பட்டுள்ளது தெரிய வந்தது.

8. மனுதாரர் 16.06.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணையின் போதும் ஆஜராகாததால் தனது தரப்பிலான விளக்கங்களையும், ஆதாரங்களையும் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார். மேலும், நகராட்சி ஆணையரால் 13.04.2016 நாளிட்ட அறிக்கையின் வாயிலாக அளிக்கப்பட்ட விளக்கங்களையும், புள்ளி விவரங்களையும் மறுத்தளிக்காத நிலையில் மனுதாரர் மேற்படி விளக்கங்கள், புள்ளி விவரங்களின் அடிப்படையில் திருப்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுகிறது.

9. எனவே விசாரணை, வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இம்முறையீடு தொடர்பாக போதிய வாய்ப்புகள் அளித்தும் மனுதாரருக்கு கூறிக் கொள்ள சரியான முகாந்திரம் ஏதுமில்லை எனக் கருதி அவ்வாறே இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 21–ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

23.6.16

பெறுநர்

1. திரு. கோ,தவசமுத்து, தலைவர்
வாய்க்கால்கள், பாசனதாரர்கள் சபை,
17/A, சன்னதி தெரு, சேக்கரை (அஞ்சல்)
திருவாரூர்– 610 003.

2. நகராட்சி ஆணையர்,
திருவாரூர் நகராட்சி,
திருவாரூர் மாவட்டம்– 610 003